# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப் பீடம்

## சிறப்புக் கலைமாணிப் பரீட்சை பகுதி - III
## முதலாம் பருவ இறுதிப் பரீட்சை – 2019

# GYG 4199 – பிரயோக மருத்துவப் புவியியல்

நேரம் : **இரண்டு (02)** மணித்தியாலம்

எவையேனும் **மூன்று** (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01.(i). "காற்றினால் பரவும் நோய்கள்" **நான்கினைப்** (04) பெயரிடுக.

(02 புள்ளிகள்)

(ii) காற்றினால் பரவும் நோய்களை தோற்றுவிக்கும் பிரதான **மூன்று** (03) வகை நோய்க்-கிருமிகளைக் (Pathogens) குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(iii) மேலே உம்மால் 1(ii)ல் குறிப்பிடப்பட்ட பிரதான நோய்க் கிருமி வகைகள் பற்றி சுருக்கமாக விவரிக்குக.

(06 புள்ளிகள்)

(iv) "காற்றினால் பரவும் நோய்களை இழிவளவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பல்வேறு மட்டத்திலான படிநிலைகளைக் கருத்திற் கொள்ள வேண்டும்". இக்கருத்தினை நுணுக்கமாகப் பரீட்சிக்குக

(08 புள்ளிகள்)

02.(i) 'நோய்களின் பரவல்' எனும் பதத்தினை வரையறை செய்க.

(02 புள்ளிகள்)

(ii) சுகாதாரப் பிரச்சினைகளின் பரவற் பாங்கில் வெல்வாக்குச் செலுத்தும் புவியியற் காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) காலநிலை மாற்றம் நோய்களின் பரவலில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக?

(06 புள்ளிகள்)

(iv) காவியினாற் பரவும் நோய்களைத் (vector borne diseases) தடுப்பதற்கான உபாயமுறைகள் பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)

03. (i) “சூழலின் சமனற்றதன்மைகள் (Environmental Inequalities)” என்றால் என்ன?

(02 புள்ளிகள்)

(ii) சுகாதார நலன்புரி சேவைகளின் சமனற்றதன்மைகளை நிர்ணயிக்கும் காரணிகளை சுருக்கமாக எடுத்துரைக்க.

(04 புள்ளிகள்)

(iii) சமூகப் பொருளாதார சமனற்றதன்மைகள் மனித உளநலத்தை எவ்வாறு பாதிக்கின்றன?

(06 புள்ளிகள்)

(iv) “புவியியற் பிரதேசமொன்றில் சமனான சுகாதார நலன்புரிச் சேவையை வழங்குவதற்கு, பயிற்றப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களின் ஈடுபாடு போன்ற விரிவான வசதிகள் அத்தியவசியத் தேவைகளாகவுள்ளன” பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றினை நுணுக்கமாகப் பரீட்சிக்குக.

(08 புள்ளிகள்)

04. (i) ”சூழற் தொகுதி” என்பதினால் நீர் விளங்குவதென்ன.

(02 புள்ளிகள்)

(ii) மனித நல்வாழ்வுக்குப் பங்களிப்புச் செய்யும் சூழற் தொகுதியின் பிரதான சேவைகள் யாவை?

(04 புள்ளிகள்)

(iii) மனித உடல் நலத்தைப் பாதிக்கும் தூய நீரின் தற்போதைய நிலையினை சுருக்கமாக விபரிக்குக.

(06 புள்ளிகள்)

(iv) சூழற் தொகுதி சேவைகளின் எதிர்கால மாற்றங்கள் எவ்வாறு மனித நல்வாழ்வைப் பாதிக்கும் என்பதை ஆராய்க.

(08 புள்ளிகள்)

05. (i) இலங்கையிற் பொதுவாகக் காணப்படும் நான்கு (04) நாட்பட்ட (நீடித்த) நோய்களைத் (Chronic diseases) தருக.

(02 புள்ளிகள்)

(ii) கடுமையான (Acute) நோய்கள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(ii) நாட்பட்ட நோய்கள் மற்றும் வறுமை என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) தென்னாசியப் பிரதேசத்திலிருந்து உதாரணங்களைக் காட்டி நாட்பட்ட நோய்களின் தற்போதைய போக்கினை ஆராய்க.

(08 புள்ளிகள்)